# வட்டார வழிவகை மையம்
# தெற்கு வட்டாரம்

(தேசிய மூலிகை தாவர வாரியம்,
ஆயுஷ் அமைச்சகம், இந்தியா)



*Berberis wightiana*



*Coscinium fenestratum*


## கேரள வன ஆராய்ச்சி நிறுவனம்

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான கேரள மாநில அரசுமன்றம்

பீச்சி -680653, கேரளா, இந்தியா.



*Sida alnifolia*

2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசால் நிறுவப்பட்ட தேசிய மூலிகை தாவர வாரியம் ( நேஷனல் மெடிஸினல் பிளான்ட் போர்டு: என் எம் பி பி), நாடு முழுவதும் மூலிகை தாவரத் துறையை மேம்படுத்து வதற்கான முக்கிய அமைப்பாகும். பல்வேறு அமைச்சகங்கள் / துறைகள் / அமைப்புகளுக்கிடையே பயனுள்ள ஒருங்கிணைப்புக்கான சரியான வழிமு றைகளை மேம்படுத்துவதும், மூலிகை தாவரங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி க்கு கொள்கை / திட்டங்களை நடைமு றைப்படுத்துவதும் இவ்வாரியத்தின் குறிக்கோள் ஆகும்.

வளரும் நாடுகளில் ஏறத்தாழ 80 சதவீதம் மக்கள் தங்களது முதல் கட்ட மருத்துவத் தேவைகளுக்கு பாரம்பரிய மருத்துவத்தையே பெரிதளவில் சார்ந்துள்ளனர். அதில் 25 சதவீதம் மருந்துகள் தாவரங்கள் அல்லது தாவர பாகங்களிலிருந்து பெறப்படுகிறது. காலப்போக்கில் மக்களின் அதிகப்படியான தேவை மூலிகை தாவரங்களை அதிக அளவில் சுரண்டுவதற்கு வழிவகுத்தது. உண்மையான மூலப்பொருட்களின் பற்றாக்குறை அதிகரிப்பால் கலப்படம் மற்றும் மாற்று மூலப்பொருட்களின் உபயோகம் அதிகரித்துள்ளது. இந்திய பாரம்பரிய மருந்துகள் உருவாக்கும் முறையில் தாவர பாகங்கள், தர கட்டுப்பாடு, ஆராய்ச்சி மற்றும் மூலிகை மருந்துகளின் வளர்ச்சிகுறித்த விவரங்கள் ஒரு தரப்படுத்த ப்பட்ட வடிவத்தில் இல்லை.

மூலிகை தாவரங்களின் அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்ய, இவ்வாரியம் வணிகரீதியாக முக்கியமான மற்றும் அரிய வகை பயிர்ச்செய் கையை ஊக்குவிப்பதிலும் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகிறது. மேலும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயிற்சி மூலம் திறனைவளர்த்தல், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நல்ல வேளாண் உற்பத்தி மற்றும் சேகரிப்பு நடைமுறைகள் (GACPs), நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் தரமான மூலப்பொ ருட்கள் ஆகியவற்றையும் ஊக்குவிக்கிறது.



*Saraca asoca*

## என் எம் பி பி வட்டார மையம் அமைத்தல்




திட்டங்களின் பயனுள்ள ஒருங்கிணைப்புக்காக, வட்டார மையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டன. கேரள வன ஆராய்ச்சி நிறுவனம் (KFRI) பீச்சியில் வட்டார வழிவகை மையம் – தெற்குவட்டாரம் (NMPB-RCFC-Southern Region) அமைந்துள்ளது.

## என் எம் பி பி வட்டார வழிவகை மையம் (தெற்கு வட்டாரம்) நோக்கம்

கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, கர்நாடகா மற்றும் யூனியன் பிரதே சங்களான அந்தமான் மற்றும் நிக்கோபார், லக்ஷதீப், பாண்டிச்சேரி ஆகியவற்றை, உள்ளடக்கிய தெற்குவட்டாரத்தில் உள்ள மூலிகை தாவரம் தொடர்பான அனைத்து விவரங்களையும் மக்களுக்கு அளிப்பதாகும்.

## என் எம் பி பி வட்டார வழிவகை மையம் (தெற்கு வட்டாரம்) குறிக்கோள்கள்

- தெற்குவட்டாரத்தில் என் எம் பி பி-இன் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- மூலிகைத் தொழில் சார்ந்த நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தெற்கு வட்டாரத்தில் அதன் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க உறுதியளித்தல்.
- தரமான நடவு பொருட்கள் (Quality Planting Material QPMs), பயிர்ச்செய்கை, பாதுகாப்பு, அறுவடை, அரைச்செயலாக்கு, மதிப்பு கூட்டுதல், சேமிப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றை பங்குதாரர்களிடையே வளர்ப்பதன் மூலம் மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப திறன்களை உருவாக்குதல்.
- பயிற்சி, பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் ஒருங்கிணைந்த கூட்டங்களை நடத்துவதற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு வழங்குதல்.
- ஆபத்திற்குட்பட்ட அதிக தேவையுள்ள தாவரங்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் மற்றும் வட்டார அளவில் தரமுள்ள நடவுப் பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துதல்.
- மூலிகை தாவர உற்பத்திகளின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்துதல்.
- என் எம் பி பி மூலம் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைப் பகுதிகளில் ஆராய்ச்சி குறித்த திட்டங்களை வடிவமைப்பதில் பல்வேறு நிறுவனங்களுக்கு உதவுதல்.
- என் எம் பி பி ஆதரவுடன் செயல்படும் திட்டங்களின் வெற்றிக் கதைகளை பரப்புதல் மற்றும் பட்டியலிடுதல் .



1975 ஆம் ஆண்டில் கேரள அரசாங்கத்தால் நிறுவப்பட்ட கேரள வன ஆராய்ச்சி நிறுவனம் **(Kerala Forest Research Institute: KFRI)** வெப்பமண்டல காடுகள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பிற்கான பன்முக ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள முதன்மையான அறிவியல் நிறுவனம் ஆகும். இயற்கை வளங்களை பாதுகாத்தல், நிலையான பயன்பாடு மற்றும் விஞ்ஞான மேலாண்மை ஆகியவற்றின் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்துவதன் மூலம் காடுகள் தொடர்பான விவகாரங்கள் பற்றிய முடிவுகள் எடுக்க இந்த மையம் வெப்பமண்டல காடுகளின் சிறப்பான ஒரு மையமாக திகழ்கிறது. 2002 ஆம் ஆண்டில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான கேரள மாநில அரசு மன்றம் (Kerala State Council for Science, Technology and Environment: KSCSTE) அமைக்கப்பட்டபோது KFRI கேரள அரசின் ஒரு அங்கமாக நியமிக்கப்பட்டு செயலகம் மற்றும் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை தன்னுள் கொண்டுள்ளது.



## தொடர்பு (CONTACT)


**வட்டார திட்ட இயக்குனர்**

(என் எம் பி பி) வட்டார வழிவகை மையம் - தெற்கு வட்டாரம்
கேரள வன ஆராய்ச்சி நிறுவனம்
பீச்சி -680653 திருச்சூர் மாவட்டம், கேரளா, இந்தியா
தொலைபேசி: +91 4872690100; +91 9447618335
மின்னஞ்சல்: rcfcsouthern@gmail.com
இணையதளம்: www.rccfcsouthern.org

**Project Regional Director**

NMPB-Regional cum Facilitation Centre (Southern Region)
Kerala Forest Research Institute
Peechi 680653, Thrissur District, Kerala, India
Phone : +91 4872690100
+91 9447618335
E-mail : rcfcsouthern@gmail.com
Website: www.rccfcsouthern.org

**டாக்டர் யு. எம். சந்திரசேகரா**

தொலைபேசி: +91 493 1220218; +91 9447851737
மின்னஞ்சல்: umchandra@rediffmail.com

**டாக்டர் பி. சுஜனபால்**

தொலைபேசி: +91 487 2690218; +91 9446330407
மின்னஞ்சல்: sujanapalp@gmail.com


KFRI


**Kerala Forest Research Institute**

(An Institution of Kerala State Council for Science, Technology & Environment)
Peechi 680 653, Thrissur, Kerala
Phone: +91-487-2690100
Fax: +91-487-2690111
Website:www.kfri.res.in

**National Medicinal Plants Board**

Ministry of AYUSH, Govt. of India
Indian Red Cross Society (IRCS)
Annexe Building, 1st & 2nd floor
1 Red Cross Road, New Delhi 110001
Phone: +91 11-23721840
Website: www.nmpb.nic.in